# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 13 திங்கட்கிழமை 29.09.2025 கதிர் 324







## ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நால்வர் நியமனம்



கொழும்பு , செப் .29

சட்டமா அதிபர் திணைக்களத்தின் நான்கு சிரேஷ்ட அதிகாரிகள், ஜனாதிபதியின் சட்டத்தரணிகளாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பதவிகளுக்கு பதவி உயர்த்தப்பட்டதை தொடர்ந்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல்களான ஹிரஞ்ஜன் பீரிஸ், ஆஸ ார்ட் நவவி, லக்மாலி கருணாநாயக்க, சுதர்ஷன டி சில்வா ஆகியோர் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி என்பது ஒரு உயர் தொழில்முறை அந்தஸ்தாகும்.

அரசியலமைப்பின் 33(cc) ஆவது பிரிவின் கீழ், சட்டத்துறையில் உயர்ந்த நிலையை அடைந்துள்ள மற்றும் உயர் நடத்தை, தொழில்முறை நேர்மைத் தரங்களைப் பேணிவரும

7

# மன்னாரில் போராட்டத்தில் குதித்துள்ள பொதுமக்கள்







மன்னார, செப் .29

மன்னாரில் அமைக்கப்படவுள்ள காற்றாலை திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பாரிய போராட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மன்னார் மாவட்டத்தில் காற்றாலை செயற் திட்டத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் இருந்த மக்கள் மீது மேற்கொள் ளப்பட்ட தாக்குதலுக்கு கடும் எதிர்ப்பை வெளி யிடும் வகையிலும் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மன்னாரில் பொதுமுடக்கமும் பாரிய ஆர்ப்பாட்ட பேரணியும் தற்போது இடம் பெற்றுவருகின்றது. இதேவேளை, குறித்த பேரணியானது இன்று காலை 10.30 மணியளவில் மன்னார் பொது மைதானத்தில் ஆரம்பமாகியுள்ளதுடன் மன்னார் பிரதான வீதியூடக மன்னார் பஸார் பகுதிக்கு சென்று மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக பல்லாயிரம் மக்களுடன் பல கோஷங்களை எழுப்பியவாறு பாரிய போராட்டம் இடம்பெற்று வருகிறது.

## யாழில் 05வது நாளாக தொடரும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம்



வடக்கு கிழக்கு, செப் .29

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நீதி கோரி சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் இன்று 05வது நாளாக

7

## கிளிநொச்சியில் குண்டு வெடிப்பு

கிளிநொச்சி, செப் .29

கிளிநொச்சி தட்டுவான் கொட்டி பகுதியில் இன்று திங்கட்கிழமை காலை 11:30 மணியளவில் குண்டு வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பாழடைந்த வீடொன்றில்

7




## கோர விபத்தில் நொறுங்கிய கார் பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழப்பு






புத்தளம், செப் .29

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் மதுரங்குளி செம்பட்டை பிரதேசத்தில் இன்று அதிகாலை இடம் பெற்ற வாகன விபத்தில் பொலிஸ் சார்ஜனட் ஒருவர் உயிழந்துள்ளார்.

புத்தளத்தில் இருந்து

7

## எம்.பிக்களின் சம்பளம் குறித்து முறைப்பாடு

கொழும்பு, செப் .29

அரசாங்க பாராளுமன்ற உறுப்பி னர்கள் தங்கள் மாத சம்பளத்தை அரசியல் நடவடிக்கைகளுக்காக கட்சி நிதிக்கு திருப்பி விடுவதாகக் கூறி பிவிதுரு ஹெல உறுமய தலைவர் உதய கம்மன்பில இன்று இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவில்

7



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# அதிகளவு போதைப்பொருள் பழக்கத்திற்கு ஆளாகும் மேல் மாகாண மாணவர்கள்

கொழும்பு, செப் .29

இலங்கையில் பாடசாலை மாணவர்களில் மேல் மாகாணத்தில் உள்ள மாணவர்களே மிகவும் போதைப்பொருளுக்கு அடிமையாகும் போக்கைக் கொண்டிருப்பது தெரியவந்துள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.

இதில் கொழும்பு மாவட்டம் முதன்மை பெறும் நிலையில், கிராண்ட்பாஸ், தொட்டலங்க, கொம்பனிவீதி, அங்குலான, வாழைத்தோட்டம், பாணந்துறை, தெஹிவளை, கல்கிஸ்ஸை, ஹிக்கடுவ உள்ளிட்ட பல நகரங்களில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள பிள்ளைகள் போதைப்பொருள் பழக்கத்திற்கு ஆளாகுவதாக அந்த சபை மேலும் கூறியுள்ளது. அத்துடன் பாடசாலை மாணவர்கள் இடையே போதைப் பழக்கத்திற்கு அடிமையாக அதிக வாய்ப்புள்ள பகுதிகளாக கண்டி மாவட்டத்தை சேர்ந்த சில பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதேநேரம் கம்பஹா, குருநாகல், அனுராதபுரம், காலி, இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களும் ஆபத்தான மாவட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை மேலும் தெரிவித்துள்ளது. நாண்பர்களின் அழுத்தமே பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பயன்பாட்டுக்கு உள்ளாகும் முக்கிய காரணியாக கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக, பாடசாலைகளில் போதைப்பொருள் கொள்கைகள் செயல்படுத்தப்படாதது, பாடசாலையில் போதைப்பொருள்தடுப்புக்கொள்கையை அமுல்படுத்துவதில் அதிபர்கள் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்கள் ஆர்வம் காட்டாதது ஆகியவை பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பழக்கத்திற்கு ஆளாவதற்கான காரணிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.



மேலும், உடைந்த குடும்பச் சூழலில் மன அழுத்த சூழ்நிலைகள், குழந்தைகளைப் புறக்கணித்தல், குடும்பம் மற்றும் வசிக்கும் பகுதியில் போதைப்பொருட்களின் பரவல், வறுமை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு போன்ற சுற்றுச்சூழல் காரணிகளும் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போதைப்பொருள் பழக்கத்திற்கு ஆளாவதை தடுக்க, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை, சர்வதேச தரத்தின்படி உள்ளூர்மயமாக்கும் 6 பிரிவுகள் மூலம் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அதன்படி, பாடசாலை அடிப்படையிலான போதைப்பொருள் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சி, இளைஞர்களை அடிப்படையாகக் கொண்ட போதைப்பொருள் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சி, குடும்ப அடிப்படையிலான போதைப்பொருள் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சி, பணியிட அடிப்படையிலான போதைப்பொருள் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சி, சுற்றுச்சூழல் அடிப்படையிலான போதைப்பொருள் கல்வி பயிற்சி அல்லது போதைப்பொருள் கொள்கை உருவாக்கம் மற்றும் ஊடக அடிப்படையிலான போதைப்பொருள் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சி ஆகிய பிரிவுகள் மூலம் அவை செயல்படுத்தப்படுகின்றன.

மேலும், போதைப்பொருள் தடுப்பு சோதனைகள், மதிப்பீட்டு சோதனைகள் மற்றும் போதைப்பொருளுக்கு அடிமையான பிள்ளைகளை தொடர்ச்சியான படிப்புக்கு பரிந்துரைத்து, ஆலோசனை, சிகிச்சை, மறுவாழ்வு மற்றும் பின் பராமரிப்பு சேவைகள் மூலம் மீட்பதை நோக்கமாகக் கொண்ட திட்டங்களை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை செயல்படுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது. இதற்கிடையில், போதைப்பொருள் பழக்கத்திற்கு உள்ளான பாடசாலை மாணவர்களை மீட்பதற்கும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை செயற்பட்டு வரும் அதேநேரத்தில், இந்த நோக்கத்திற்காக, சோதனைக்கு பின்னர் மூன்று முறைகளில் செயற்படுவதற்காக பாடசாலை ஆலோசகர் ஆசிரியர் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, குறைந்த அவதானமுள்ள மாணவர்களுக கான ஆலோசனை மற்றும் தலையீடு முதல் முறையில் மேற்கொள்ளப்படுகிறது. இரண்டாவது முறையில் நடுத்தர ஆபத்துள்ள மாணவர்களை கண்டறிதல் மற்றும் அதிக ஆபத்துள்ள மாணவர்களைக் கண்டறிந்து, அவர்களை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை அதிகாரிகளிடம் பரிந்துரைப்பதாகும்.

இறுதி கட்டமாக, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் இளைஞர் சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெற்று அவர்கள் விரும்பியபடி பாடசாலை கல்வி அல்லது தொழிற்கல்விக்குத் திரும்புமாறு அறிவுறுத்தப்படுவார்கள் என்றும் மேலும் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் ஓகஸ்ட் 31 வரை போதைப்பொருள் குற்றங்களுக்காக 206 பிள்ளைகளை பொலிஸார் பொறுப்பேற்றுள்ளனர்.

இவர்களில் 39 பிள்ளைகள் நன்னடத்தையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. பிள்ளைகளை போதைப்பொருள் பழக்கத்திற்கு ஆளாக்கியமை தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பிள்ளைகள் போதைப்பொருட்களுக்கு ஆளாவதை தடுக்க இலங்கை பொலிஸார், பாடசாலை மற்றும் உரிய நிறுவனங்களில் 15,652 செயற்திட்டங்களை நடத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)



# அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் இல்லை!

கொழும்பு, செப் .29

கடந்த ஆண்டில் இராஜதந்திர உறவுகளில் சமநிலையைப் பராமரிக்க இலங்கையினால் முடிந்தது என்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

தொடர்ந்தும் பொருளாதாரம் மற்றும் சந்தையில் தேசிய எல்லைகள் இல்லாத உலகில், எந்த நாடும் தனியாக முன்னேற முடியாது என்றும், சிறந்த இராஜதந்திர உறவுகள் இலங்கையை உலகின் உச்சத்திற்கு உயர்த்தும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கு, தேசிய ஒற்றுமையை உருவாக்க வேண்டும் என்றும், இலங்கை வரலாற்றில் எந்த இன மோதல்களும் தலைதூக்காத ஆண்டாக கடந்த வருடம் வரலாற்றில் இணைவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.



டோக்கியோவில் உள்ள சுநலைரமயை மண்டபத்தில் நேற்று (28) ஜப்பானில் வசிக்கும் இலங்கை சமூகத்தினருடனான சந்திப்பில் உரையாற்றும் போது ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

ஜப்பானில் உள்ள இலங்கை தூதரகம் மற்றும் தொண்டு நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த சந்திப்பில், மகா சங்கத்தினர், மதத் தலைவர்கள், தொழில் வல்லுநர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஜப்பானில் வசிக்கும் பலர் கலந்து கொண்டனர்.

இலங்கையிலோ அல்லது நாட்டிற்கு வெளியேயோ வசிக்கும் எந்தவொரு இலங்கையரும் தனிப்பட்ட சலுகைகள் அல்லது நலன்களை எதிர்பார்த்து தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவர்கள் அனைவரும் எதிர்பார்த்த மாற்றத்திற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் அரசாங்கத்தின் ஒரு வருட பயணத்தின் வெற்றியை அளவிட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை நிறுவுதல், சட்டத்தின் ஆட்சியை நிறுவுதல், ஊழல் மற்றும் மோசடி இல்லாத ஆட்சியை நிறுவுதல் மற்றும் அரச இயந்திரத்தை செயற்திறனுள்ளதாக்குதல் போன்ற மக்கள் எதிர்பார்க்கும் புதிய மாற்றங்களுக்கு அரசாங்கம் கடந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க பணிகளை நிறைவேற்றியுள்ளது என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அத்தோடு வெளியில் கட்டியெழுப்பப்பட்டு வரும் பொருளாதாரத்திற்குள் பொருளாதார வளர்ச்சி இலக்குகளை அடைவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்றும், அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் புதிய வரிகளை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கவில்லை என்றும், எதிர்காலத்தில் சில வரி விகிதங்களைக் குறைப்பதிலும் கவனம் செலுத்தப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கட்டியெழுப்பப்படும் இலங்கையில் முதலீடு செய்து, நாட்டின் வெற்றிப் பயணத்தில் பங்காளராகுமாறு ஜப்பானில் வாழும் இலங்கையரிடம் இதன் போது கோரிக்கை விடுத்த ஜனாதிபதி, அதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அவர்கள் எழுப்பிய கேள்விகள் மற்றும் பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதி பதிலளித்தார்.

ஜப்பானில் வாழும் இலங்கை சமூகத்தினரிடையே உரையாற்றிய ஜனாதிபதி அநுகுமார திசாநாயக்க மேலும் கூறியதாவது,

“இலங்கையின் புதிய அரசியல் மாற்றத்திற்கு நீங்கள் பல்வேறு வழிகளில் ஆதரவளித்துள்ளீர்கள்.

செப்டம்பர் 21 ஆம் திகதி ஏற்பட்ட அந்த அரசியல் திருப்பத்தில் நீங்கள் பங்கேற்பாளராகவும் பங்குதாரர்களாகவும் மாறிவிட்டீர்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்து இப்போது ஒரு வருடம் நிறைவடைகிறது.

இந்த ஒரு வருட காலத்தை எந்த அளவுகோலால் அளவிட வேண்டும்? கடந்த ஆண்டு நல்லதா கெட்டதா என்பதை, நாங்கள் அரசாங்கத்தை அமைத்தபோது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகளால் அளவிட வேண்டும்.

அவ்வாறின்றி, நாங்கள் ஆட்சி அமைத்தபோது வேறு எதிர்பார்ப்புகளைக் கொண்டிருந்தவர்களின் கருத்துகளின் அடிப்படையில் அல்ல. அன்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை உருவாக்க எந்த நோக்கத்திற்காக ஆதரித்தீர்கள்?

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களான நீங்களோ அல்லது எங்கள் அரசாங்கத்தை உருவாக்க பங்களித்த இலங்கையில் உள்ள எவருமோ தனிப்பட்ட ரீதியில் எதையும் சம்பாதிக்கும் நோக்கிலோ, சலுகை பெற வேண்டுமென்றோ தனிப்பட்ட முறையில் ஏதாவது பெற வேண்டும் என்ற நோக்கத்துடனோ செயல்படவில்லை.

எனவே, நீங்கள் அனைவரும் தனிப்பட்ட நலன்களுக்கு அப்பால் சென்று ஒரு நாடாக, ஒரு தேசமாக நாம் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லும் விருப்பத்துடன் மட்டுமே பங்களித்தீர்கள். ஏற்கனவே இருந்த பாதைக்கு பதிலாக ஒரு புதிய பாதையை உருவாக்கும் நோக்கத்துடன் நீங்கள் செயல்பட்டீர்கள். முதலில், வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டியிருந்தது. இன்று, நாட்டின் பொருளாதாரத்தை நாம் குறிப்பிடத்தக்க அளவிற்கு ஸ்தீரப்படுத்தியுள்ளோம். ஆனால் நாம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. அதேபோன்று, சட்டத்தின் ஆட்சியை நீங்கள் எதிர்பார்த்தீர்கள்.

ஒவ்வொரு வளர்ந்த நாட்டிலும் இருக்கும் காரணி என்னவென்றால், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை நாங்கள் காண்கிறோம். சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

ஆனால் சட்டத்தை அணுகக்கூடியவர்களும் அணுக முடியாதவர்களும் இருக்கிறார்கள் என்பது எங்கள் கருத்தாக இருந்தது. அதிகாரத்தாலும் செல்வத்தாலும் இந்த நிலை உருவாக்கப்பட்டது. ஆனால் இன்று, சட்டத்தை அணுக முடியாத யாரும் நம் இலங்கையில் வசிக்கவில்லை.

நாட்டைக் கட்டியெழுப்புவதில், பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மை, சட்டத்தின் ஆட்சியை நிறுவுதல் மற்றும் மோசடி மற்றும் ஊழலைக் குறைத்தல் மற்றும் திறமையான அரச பொறிமுறை என்பன அவசியம். இன்று, இலங்கையில் 76 ஆண்டுகால அரசியல் அதிகாரத்திற்குப் பிறகு, பொதுமக்களின் பணம் திருடவோ அல்லது வீணாக்கவோ செய்யாத ஒரு அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆனால் இன்னும் நிறைய செய்ய வேண்டியுள்ளது. ஏனெனில், அரச பொறிமுறையானது இந்த பழைய பழக்கங்களிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டும். அதை மாற்றுவதற்கான முதல் படியை நாங்கள் எடுத்துள்ளோம்.

சிறந்த அரச சேவையை உருவாக்க தேவையான அடிப்படை நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்துள்ளோம். வலுவான ராஜதந்திர உறவுகளை உருவாக்குவதும் மிக முக்கியம். உலகில் எந்த நாடும் இனி தனிமையில் வாழ முடியாது.

பொருளாதாரம், தொழில்நுட்பம் மற்றும் சந்தைகளால் நாம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளோம். எனவே, தேசிய எல்லைகள் இருந்தாலும், பொருளாதாரத்தில் இனி தேசிய எல்லைகள் கிடையாது. சந்தையில் தேசிய எல்லைகள் இல்லை.

அவை அனைத்தும் முறியடிக்கப்பட்டுள்ளன. எனவே, ஒரு அரசு முன்னேற, வலுவான, நிலையான மற்றும் தெளிவான வெளிநாட்டு உறவுகள் அவசியம். கடந்த ஆண்டில், நமது இராஜதந்திர உறவுகளில் பராமரிக்கப்பட வேண்டிய சமநிலையை எம்மால் குறிப்பிடத்தக்க அளவில் பராமரிக்க முடிந்தது என்று நான் நினைக்கிறேன். இந்த அடிப்படைகளை நிறுவாமல் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

மேலும், வெவ்வேறு இனக்குழுக்கள் மற்றும் மதங்கள் நம் நாட்டில் வாழ்கின்றன. அவர்களுக்கு அவற்றின் தனித்துவமான கலாச்சாரங்கள் உள்ளன.

எனவே, நமது நாடு பல்வேறு மக்கள் நிறைந்த நாடு. நமது நாட்டை முன்னோக்கி நகர்த்த, இந்த மக்களிடையே ஒற்றுமையை உருவாக்க வேண்டும். ஆனால் நீண்டகால அரசியல் போராட்டத்தின் காரணமாக, இந்த மக்கள் பல்வேறு இன மோதல்கள் மற்றும் மத மோதல்களை உருவாக்குவதன் மூலம் ஒருவருக்கொருவர் அந்நியப்படுத்தப்பட்டனர்.

புவிசார் அரசியல் இயக்கம் அத்தகைய இன ஆதாரங்கள் மற்றும் சித்தாந்தங்களுடன் கட்டமைக்கப்பட்டது. எனவே, மோதல்கள் நிறைந்த ஒரு நாடு, ஒருவருக்கொருவர் பிரிவினையையும் வெறுப்பையும் விதைக்கும் ஒரு நாடு முன்னேற முடியாது.

எனவே, நம் நாட்டில் உள்ள கலாச்சார பன்முகத்தன்மை, மொழி வேறுபாடுகள் மற்றும் மத வேறுபாடுகளைப் புரிந்துகொள்ளும் ஒருமித்த கருத்தைக் கொண்ட ஒரு அரசை நாம் கட்டியெழுப்ப வேண்டும். கடந்த ஆண்டு இலங்கையின் வரலாற்றில் எந்த இன மோதல்களும் அதிகரிக்காத ஆண்டு என்று நான் நினைக்கிறேன். ஆனால் நாம் மேலும் முன்னேற வேண்டும்.

ஒரு வலுவான கட்டிடத்தை கட்டியெழுப்ப, நமக்கு மிகவும் வலுவான அடித்தளம் தேவை. ஆனால் நம் நாடு அடித்தளம் உடைந்த ஒரு நாடு. இன்று நாம் அந்த அடித்தளத்தை அமைத்துவிட்டோம்.

கடந்த ஆண்டு நமது நாட்டை முன்னோக்கி கட்டியெழுப்ப தேவையான வலுவான அடித்தளத்தை அமைத்த ஆண்டு. இப்போது நாம் இந்த அடித தளத்தின் மீது கட்டிடங்களை கட்டத் தொடங்க வேண்டும். இந்த அடித்தளத்தில் நாட்டை கட்டியெழுப்பும்போது, அரசாங்கத்திற்கு சவால்கள் உள்ளன. நாட்டிற்கு ஒரு சவால் உள்ளது. மக்களுக்கும் ஒரு சவால் உள்ளது. அதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அரசாங்கம் எதிர்கொள்ளும் சவால் வருவாயை ஈட்டுவதாகும். நாடு எதிர்கொள்ளும் சவால் பொருட்கள் மற்றும் சேவைகளை இறக்குமதி செய்ய தேவையான டொலர்களை ஈட்டுவதாகும்.

மேலும் மக்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் அவசியம். எனவே, அரசாங்கம் வருவாயை ஈட்ட வேண்டும்.

இலங்கையில் முதல் முறையாக, வரவு செலவுத் திடத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் வருவாயை விட இந்த ஆண்டு அதிக வருவாயை ஈட்ட முடிந்தது.

அரசாங்கம் வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து வருவாயை ஈட்டுவதற்கு பதிலாக, அரசாங்கம் ஒரு வெளியில் பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். அந்த வெளிப் பொருளாதாரத்தை தயார் செய்வதற்கு தேவையான சட்ட ஆதரவு மற்றும் உள்கட்டமைப்பை உருவாக்குவதே அரசாங்கத்தின் வகிபாகமாகும்.

வெளிப் பொருளாதாரம் வளரும்போது, வரி விகிதம் குறைந்து மக்கள் நிவாரணம் பெறுவர். அதன்படி, இந்த வரவு செலவுத் திட்டத்தில் எந்த புதிய வரிகளையும் அறிமுகப்படுத்தாதிருக்க எதிர்பார்க்கிறோம். எதிர்காலத்தில் சில வரி விகிதங்களை குறைப்பதிலும் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம்.

இவ்வாறு எங்களிடம் பொருளாதாரத் திட்டங்கள் உள்ளன. அதற்காக, வெளியிலே பாரிய பொருளாதாரம் கட்டமைக்கப்பட வேண்டும்.

அதில், சுற்றுலாத் துறையில் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். 2030 ஆம் ஆண்டுக்குள் 4 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து 8 பில்லியன் டொலர் மதிப்புள்ள பொருளாதாரமாக மாற நாங்கள் எதிர்பார்க்கிறோம். அதற்காக, வர்த்தகர்களுக்குத் தேவையான உள்கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்கி வருவதோடு சுற்றுலாத் துறைக்குத் தேவையான சூழலை உருவாக்குகிறது.

மேலும், இலங்கையின் பிம்பத்தை மேம்படுத்துவது இந்த விடயத்தில் முக்கியமானது. இலங்கை ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாக இருப்பதாக ஏற்கனவே தகவல்கள் வெளியிடப்படுகின்றன.

மேலும், நாடு தற்போது தேவையான முதலீடுகளைப் பெற்று வருகிறது. நெடுஞ்சாலைகள், மின்சாரம், நீர் போன்ற உள்கட்டமைப்பு மேம்பாட்டில் அரசாங்கம் அதிக முதலீடு செய்ய வேண்டும்.

அதேபோன்று, தனியார் துறை பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்த வேண்டும். அரசாங்கத்திடம் அதிக எண்ணிக்கையிலான தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. பெயர் இருந்தபோதிலும், அவை அந்த நிலத்திற்கு ஏற்ப வருமானத்தை ஈட்டுவதில்லை. எனவே, மிகவும் மதிப்புமிக்க எமது வளமான நிலத்தை மிகச் சிறப்பாக நிர்வகிக்க வேண்டும்.

எனவே, தோட்டங்களை வைத்திருக்கும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் பலனற்ற அனைத்து நிலங்களையும் வழங்குமாறு நாங்கள் அறிவித்துள்ளோம். அவற்றில் முதலீடு செய்ய உங்களை அழைக்கிறோம். உங்களுக்கான பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குவதே எங்கள் பணியாகும்.

மேலும், தொழில்வாய்ப்புகளை உருவாக்கக் கூடிய பொருளாதாரத்தை உருவாக்குவது ஒரு அரசாங்கத்தின் பொறுப்பு. இன்று, அந்த பொறுப்பை நாங்கள் நிறைவேற்றி வருகிறோம்.

எனவே, சில ஆண்டுகள் கடினமாக உழைத்தால், நமது நாட்டில் ஏற்பட்டுள்ள வறுமையை பொருளாதார ரீதியாக நாம் போக்க முடியும்.

மேலும், அரச சேவையை செயற்திறனுள்ளதாக மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம். டிஜிட்டல் மயமாக்கலை அதன் முக்கிய அங்கமாக நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். அடுத்த ஆண்டுக்குள், அரசாங்கத்துடனான அனைத்து கொடுக்கல் வாங்கலும் ஒன்லைனில் செலுத்தப்படும்.

மேலும், கேள்வி மனுக்கல், மற்றும் சுங்கப் பணிகள் டிஜிட்டல் மயமாக்கப்படும். அதை வெற்றிகரமாக மாற்ற முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

நமது நாட்டின் சட்டங்களை இயற்றியவர்களே அந்தச் சட்டங்களுக்கு மாறாகச் செயல்பட்டுள்ளனர். சட்டம் இருந்தாலும், அது செயல்படுத்தப்படவில்லை என்பது அவர்களுக்குத் தெரியும். சட்டம் மட்டும் போதுமானதல்ல. அது செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

(7ஆம் பக்கம் பார்க்க..)

# கரூர் துயரம் காரணம் என்ன?.. முதற்கட்ட பரப்புரையில் இருந்தே நிபந்தனைகளை அலட்சியப்படுத்தும் விஜய்!!



த.வெ.க. தலைவர் விஜய், இதுவரை மாநாடுகள் மூலம் மட்டுமே தொண்டர்களை சந்தித்து வந்த நிலையில், திருச்சியில் இருந்து தனது அரசியல் பரப்புரை பயணத்தை தொடங்கினார். செப்டம்பர் 13ம் தேதி காலை 10.35 மணிக்கு விஜய், திருச்சி காந்தி மார்க்கெட் காவல் சரகம் மரக்கடை எம்.ஜி.ஆர். சிலை அருகே பிரச்சாரம் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டு இருந்த நிலையில், திருச்சி விமான நிலையத்தில் இருந்து அங்கு செல்ல விஜய்க்கு 4 மணி நேரம் தாமதமானது. அந்த அளவுக்கு விஜயின் பிரச்சாரம் வாகனம் முன்பு அவரது தொண்டர்கள் சூழ்ந்து கொண்டனர். 4 மணி நேர தாமதத்திற்கு பிறகு பிற்பகல் 2.30 மணிக்கு திருச்சி காந்தி மார்க்கெட்டுக்கு வந்து பிரச்சாரம் செய்தார்.

அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு அரியலூர் பழைய பேருந்து நிலையம் அருகில் விஜய் பரப்புரை மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டு இருந்த நிலையில், 6 மணிநேர தாமதத்திற்கு பிறகு திருச்சியில் இருந்து அரியலூர் சென்று பரப்புரை மேற்கொண்டார். ஏற்கனவே மாலை 4.30 மணிக்கு பெரம்பலூர் குன்னம் பேருந்து நிலையம் அருகிலும், மாலை 5 மணிக்கு வானொலி திடலிலும் விஜய் பிரச்சாரம் செய்வார் என அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் அறியலூரிலேயே இரவு 8.30 மணி ஆனதால் விஜய் பெரம்பலூர் செல்வதற்கு 12.30 மணி ஆனது. இதனால் பெரம்பலூரின் குன்னம் பகுதிக்கும் வந்த விஜய் மக்களை பார்த்து கையை மட்டும் அசைத்து விட்டு எதுவும் பேசாமல் சென்றார். பின்னர் வானொலி திடலுக்கு செல்லாமல் விஜய், சென்னைக்கு திரும்பினார்.

செப்.20ம் தேதி இரண்டாம் கட்ட பரப்புரையில் நாகப்பட்டினம் மாவட்டம் புத்தூர் அண்ணா சிலை அருகே நண்பகல் 12.30 மணிக்கு பிரச்சாரம் மேற்கொள்ள காவல்துறை அனுமதி வழங்கியது. ஆனால் திருச்சி விமான நிலையத்திற்கு 9.15 மணிக்கு வந்த விஜய், அங்கிருந்து நாகைக்கு காரில் புறப்பட்டார். நாகையில் பிரச்சாரம் செய்ய காவல்துறை அனுமதித்த நேரத்தை தாண்டி பிற்பகல் 1.30 மணிக்கு தான் விஜயின் பிரச்சார வாகனம் வந்தது. பின்னர் திருவாரூர் தெற்கு வீதியில் பிற்பகல் 3 மணியளவில் பிரச்சாரம் செய்ய அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் 3 மணிநேர தாமதத்திற்கு பிறகு மாலை 6 மணியளவில் திருவாரூர் சென்று விஜய் பரப்புரை மேற்கொண்டார்.

இதேபோன்று தான் நாமக்கல், கரூர் மாவட்டங்களிலும் விஜயின் பிரச்சார வாகனம் செல்வதற்கு தாமதமாகியுள்ளது. செப்.27ம் தேதி காலை 8.45 மணிக்கு நாமக்கலிலும், மதியம் 12.45 மணிக்கு கரூர் வேலுசாமி புரத்திலும் விஜய் பேசுவார் என தவெக சார்பில் அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால், 6 மணிநேர தாமதத்திற்கு பிறகு நாமக்கல் சென்ற விஜய், அங்கிருந்து 9 மணிநேர தாமதத்திற்கு பிறகுதான் கரூர் சென்றார். விஜய் பரப்புரைக்கு காலதாமதமாக வருவது ரசிகர்கள் அவர்கள் வாகனத்தை மறிப்பது, பின் தொடர்ந்து செல்வதால் ஏற்படும் கூடுதல் கால தாமதம் என காவல்துறையின் நிபந்தனைகள் தொடர்ந்து மீறப்பட்டு வந்துள்ளன. மேலும், தவெக சார்பில் முறையான ஒருங்கிணைப்பு இல்லாததும் கால தாமதம் உள்ளிட்ட விதிமீறல்களுக்கு காரணம் என்று சொல்லப்படுகிறது. (ஐ)

## பாலித்தீன் கவர் தயாரிக்கும் நிறுவனத்தில் பயங்கர தீ விபத்து: ரூ.70 லட்சம் மதிப்பிலான பொருட்கள் முற்றிலும் எரிந்து சேதம்



செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகரில் உள்ள தனியார் நிறுவனத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் ரூ.70 லட்சம் மதிப்பிலான பொருட்கள் தீயில் எரிந்து சேதம் ஆகின. செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகர் பகுதியில் ஒரு தனியார் தொழிற்சாலை என்பது இயங்கி வருகிறது. இந்த தனியார் தொழிற்சாலையில் பாலித்தீன் கவர் தயாரித்து வருகின்றனர். இந்த கம்பெனி பொறுத்தவரை சுமார் 40க்கும் அதிகமான ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில், இன்று அதிகாலையில் எதிர்பாராத மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த தீ ஏற்பட்ட தொடர்ச்சியாக மறைமலைநகர் பகுதியில் இருந்தும் அதேபோல் மஹேந்திரசிட்டி பகுதியில் கிட்டத்தட்ட இரண்டு இடங்களில் இருந்து 30க்கும் அதிகமான தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு இருக்கின்றனர்.

இருந்தாலும் கூட யாரும் அதிகளவில் நடந்த தீ விபத்து காரணமாக ஊழியர்கள் யாரும் இல்லாத ஒரு காரணமாக எந்த ஒரு அசம்பாவிதமும் தவிர்க்கப்பட்டது. கிட்டத்தட்ட தீ விபத்து காரணமாக ரூ.70 லட்சம் மதிப்பிலான பாலத்தின் கவர்கள் முழுமையாக எரிந்து சேதம் அடைந்ததாக தகவல் தெரிவித்தார்கள். கிட்டத்தட்ட ஐந்து மணிநேரத்துக்கு மேலாக தீயணைப்பு வீரர்கள் தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை அணைக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டனர். (ஐ)





## கரூர் துயரம்: வெள்ளியன்று ஐகோர்ட் விசாரணை

கரூரில் விஜய் பிரச்சார கூட்ட நெரிசலில் 40 பேர் உயிரிழந்தது தொடர்பாக வெள்ளியன்று ஐகோர்ட் கிளை விசாரணை நடத்த உள்ளது. உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வரும் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வருகிறது. ஐகோர்ட் கிளை நீதிபதிகள் தண்டபாணி, ஜோதிராமன் அமர்வு விசாரணை நடத்துகிறது. (ஐ)

## சபரிமலையில் மாயமான 4 பவுன் எடையுள்ள தங்க பீடம் புகார் கூறிய நன்கொடையாளரின் உறவினர் வீட்டிலிருந்து மீட்பு

சபரிமலையில் மாயமானதாக கூறப்பட்ட 4 பவுன் எடையுள்ள துவாரபாலகர் சிலையின் தங்க பீடம் புகார் கூறிய நன்கொடையாளரின் உறவினர் வீட்டிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது . சபரிமலை ஐயப்பன் கோயிலில் முன்புறமுள்ள 2 துவாரபாலகர் சிலைகளில் பெங்களூருவை சேர்ந்த உண்ணிகிருஷ்ணன் போத்தி என்பவர் தன்னுடைய செலவில் தங்கத் தகுடுகள் பதித்துக் கொடுத்தார். திருவிதாங்கூர் தேவசம் போர்டின் இந்த நடவடிக்கைக்கு கேரள உயர்நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்தது. கடந்த சில வருடங்களுக்கு முன்பும் இதேபோல் இந்த தங்கத் தகடுகள் பழுது பார்ப்பதற்காக சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டது. அப்போது பணிகள் முடிந்த பின்னர் திரும்ப சபரிமலைக்கு கொண்டு வந்தபோது அதில் 4 கிலோ தகடுகள் மாயமானது கண்டுபிடிக்கப்பட்டது. கேரள உயர்நீதிமன்றம் நடத்திய விசாரணையில் இந்த விவரம் தெரியவந்தது.

இதற்கிடையே கடந்த சில வருடங்களுக்கு முன் துவாரபாலகர் சிலைக்கு தான் 4 பவுன் எடையில் பீடம் அமைத்துக் கொடுத்ததாகவும், அது தற்போது எங்கு இருக்கிறது என்று தெரியவில்லை என்று உண்ணிகிருஷ்ணன் போத்தி கூறியது அடுத்த பரபரப்பை ஏற்படுத்தியது. இதுகுறித்து விசாரணை நடத்த திருவிதாங்கூர் தேவசம் போர்டுக்கு கேரள உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இதன்படி தேவசம் போர்டு விஜிலன்ஸ் அதிகாரிகள் விசாரணை நடத்தினர். தேவசம் போர்டின் பாதுகாப்பு அறைகளில் நடத்திய சோதனையில் அங்கு பீடம் இல்லை என தெரியவந்தது. இதைத்தொடர்ந்து உண்ணிகிருஷ்ணன் போத்தியின் பெங்களூரு மற்றும் திருவனந்தபுரத்தில் உள்ள வீடுகளில் போலீசார் சோதனை நடத்தினர். ஆனால் அங்கும் பீடம் சிக்கவில்லை.

இந்நிலையில் திருவனந்தபுரம் அருகே வெஞ்ஞாரமூட்டில் உள்ள உண்ணிகிருஷ்ணன் போத்தியின் உறவினர் வீட்டில் பீடம் இருப்பதாக போலீசுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதைத்தொடர்ந்து போலீசார் அங்கு விரைந்து சென்று நடத்திய விசாரணையில் அந்த உறவினர் வீட்டிலிருந்து பீடம் கண்டுபிடிக்கப்பட்டது. அதை போலீசார் கைப்பற்றி கொண்டு சென்றனர். பீடம் மாயமானதாக புகார் கூறிய உண்ணிகிருஷ்ணன் போத்தியின் உறவினர் வீட்டிலிருந்தே பீடம் கண்டுபிடிக்கப்பட்டதில் மர்மம் இருப்பதாக கருதப்படுகிறது. இதுகுறித்து கேரள உயர்நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய தேவசம் போர்டு தீர்மானித்துள்ளது. (ஐ)

## 17 மாணவிகளுக்கு பாலியல் தொல்லை தலைமறைவாக இருந்த டெல்லி சாமியார் கைது



17 மாணவிகளை பாலியல் பலாத்காரம் செய்த வழக்கில் தலைமறைவாக இருந்த சாமியார் சைதன்யானந்த சரஸ்வதி ஆக்ராவில் கைது செய்யப்பட்டார். டெல்லியின் வசந்த்குஞ்ச் பகுதியில் ஸ்ரீ சாரதா இந்தியா மேலாண்மை நிறுவனம் என்ற தனியார் கல்வி நிறுவனம் இயங்கி வருகிறது. இங்கு 70க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இதன் நிர்வாகியாக சாமியார் சைதன்யானந்த சரஸ்வதி பொறுப்பு வகித்து வந்தார்.

இவர் அங்கு படிக்கும் மாணவிகளிடம் பாலியல் தொல்லை தருவதாக புகார் எழுந்தது. மாணவிகளிடம் ஆபாசமாக பேசுவது, ஆபாச குறுஞ்செய்திகள் அனுப்புவது, மாணவிகளை அத்துமீறி தொடுவது போன்ற செயல்களை செய்து வந்துள்ளார். இதுதொடர்பான புகார்களின் அடிப்படையில் 30க்கும் மேற்பட்ட மாணவர்களிடம் காவல்துறையினர் விசாரணை நடத்தினர். அப்போது 17 மாணவிகள் சைதன்யானந்த சரஸ்வதி பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டினர். இந்த புகாரின் அடிப்படையில் சைதன்யானந்த சரஸ்வதிக்கு எதிராக கடந்த ஆகஸ்ட் 4ம் தேதி எப்ஐஆர் பதிவு செய்யப்பட்டது. இதையறிந்த சைதன்யானந்த சரஸ்வதி டெல்லியில் இருந்து தப்பி தலைமறைவானார்.

இதைத்தொடர்ந்து சாமியார் சைதன்யானந்த சரஸ்வதிக்கு தொடர்புடைய ரூ.8 கோடி மதிப்பிலான சொத்துகளை காவல்துறை முடக்கியது. இந்நிலையில் ஆக்ராவில் ஒரு ஹோட்டலில் மறைந்திருந்த சாமியார் சைதன்யானந்த சரஸ்வதியை டெல்லி காவல்துறையினர் நேற்று கைது செய்தனர். தொடர்ந்து டெல்லி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சைதன்யானந்த சரஸ்வதியை 5 நாள் போலீஸ் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். (ஐ)




# இன்று உலக இதய தினம்

ஆண்டுதோறும் இன்று (செப்டம்பர் 29) உலக இதய தினம் கடைபிடிக்கப்படுகிறது. இந்த நாளைக் கொண்டாடுவதன் நோக்கம் இதய நோயின் முக்கியத்துவம், அதன் தடுப்பு மற்றும் இதய பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். ஆரோக்கியமான இதயத்தைப் பராமரிப்பதில் உணவுமுறை முக்கிய பங்கு வகிக்கிறது. உங்கள் இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க உங்கள் உணவில் சேர்க்கக்கூடிய சில உணவுகளைப் பற்றி அறிந்து கொள்வோம்.

பச்சை இலை காய்கறிகள்: கீரை போன்ற பச்சை இலைக் காய்கறிகளில் வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் நார்ச்சத்து நிறைந்துள்ளன. அவற்றை உங்கள் உணவில் சேர்த்துக் கொள்வது நல்ல இதய ஆரோக்கியத்தைப் பராமரிக்க உதவும்.

முழு தானியங்கள்: பார்லி, கோதுமை போன்ற முழு தானியங்களில் செலினியம், நார்ச்சத்து மற்றும் வைட்டமின்கள் உள்ளன. அவற்றை உங்கள் உணவில் சேர்ப்பது உங்கள் இதயத்திற்கு நன்மை பயக்கும்.

பெர்ரி: நார்ச்சத்து மற்றும் ஆக்ஸிஜனேற்றிகள் நிறைந்த பெர்ரிகளை சாப்பிடுவது, உயர் இரத்த அழுத்தம் மற்றும் கொழுப்பைக் குறைக்க உதவுகிறது, இதனால் ஆரோக்கியமான இதயத்தைப் பராமரிக்கிறது.

வெண்ணெய் பழம்: ஆரோக்கியமான கொழுப்புகள் நிறைந்த அவகேடோவை உங்கள் உணவில் சேர்த்துக் கொள்வது இதய ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது.

கொழுப்பு நிறைந்த மீன்: சால்மன் போன்ற கொழுப்பு நிறைந்த மீன்களில் ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள் உள்ளன, மேலும் அவற்றை உங்கள் உணவில் சேர்த்துக் கொள்வது இதய ஆரோக்கியத்திற்கு மிகவும் நன்மை பயக்கும்.

தக்காளி: லைகோபீன் மற்றும் ஆக்ஸிஜனேற்றிகள் நிறைந்த தக்காளி, உயர் இரத்த அழுத்தம் மற்றும் கொழுப்பைக் குறைக்க உதவுகிறது, இதனால் ஆரோக்கியமான இதயத்தைப் பராமரிக்கிறது.

பருப்பு வகைகள்: நார்ச்சத்து மற்றும் புரதம் நிறைந்த பருப்பு வகைகள் மற்றும் பீன்ஸ் ஆகியவை இதய ஆரோக்கியத்திற்கு மிகவும் நன்மை பயக்கும்.

கொட்டைகள்: ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள், நார்ச்சத்து, ஆக்ஸிஜனேற்றிகள் மற்றும் ஆரோக்கியமான கொழுப்புகள் நிறைந்த கொட்டைகளை சாப்பிடுவது, கொழுப்பைக் குறைக்கிறது, இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துகிறது மற்றும் இதய ஆரோக்கியத்தைப் பராமரிக்கிறது.


டார்க் சாக்லேட்: ஆக்ஸிஜனேற்றம் நிறைந்த டார்க் சாக்லேட் இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது.











# தேவாலயத்தில் நடத்த துப்பாக்கிச்சூட்டில் 4 பேர் பரிதாப உயிரிழப்பு: 9 பேர்காயம்!



அமெரிக்காவில்தேவாலயத்தில்நடந்த துப்பாக்கிச்சூட்டில் 4 பேர் உயிரிழந்தனர். மேலும் 9 பேர் காயம் அடைந்துள்ளனர். அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணம் கினிசி நகரின் அருகே கிராண்ட் பிளாங் டவுன்ஷிப் என்ற பகுதி உள்ளது. இந்த பகுதியில் கிறிஸ்தவ மத வழிபாட்டு தலம் உள்ளது. இந்நிலையில், இந்த வழிபாட்டு தலத்தில் நேற்று பலர் பிரார்த்தனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அப்போது, அந்த வழிபாட்டு தலத்திற்கு 40 வயது நிரம்பிய தாமஸ் ஜாக்கப் சன்போர்ட் என்ற நபர் காரில் வந்தார்.

காரில் இருந்து இறங்கிய தாமஸ் தான் வைத்திருந்த 2 துப்பாக்கிகளை எடுத்துக கொண்டு மத வழிபாட்டு தலத்திற்கு சென்றுள்ளார். அங்கு பிரார்த்தனை செய்துகொண்டிருந்த வர்களை துப்பாக்கியால் சரமாரியாக சுட்டார். மேலும், மத வழிபாட்டு தலத்திற்கு தீ வைத்தார். இந்த சம்பவத்தில் 4 பேர் உயிரிழந்தனர். மேலும், 8 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு போலீசார் விரைந்து சென்றனர். அப்போது, போலீசாரை நோக்கி தாமஸ் சுட்டார். இதையடுத்து போலீசார் நடத்திய பதிலடி துப்பாக்கி சூட்டில் தாமஸ் கொல்லப்பட்டார். பின்னர், படுகாயமடைந்த அனைவரையும் மீட்ட போலீசார் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்த, அமெரிக்க அதிபர் டிரம்ப், இது குறித்து சமூக வலைதளத்தில் டிரம்ப் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது மிச்சிகனில் உள்ள கிராண்ட் பிளாங்கில் உள்ள தேவாலயத்தில் நடந்த கொடூரமான துப்பாக்கிச் சூடு குறித்து எனக்கு விளக்கப்பட்டது. எப்பிஐ அதிகாரிகள் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்தனர். துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் இறந்துவிட்டார்.

இது அமெரிக்காவில் கிறிஸ்தவர்கள் மீது குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலாகத் தெரிகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் அவர்களது குடும்பங்களுக்காகவும் பிரார்த்தனை செய்யுங்கள். நமது நாட்டில் இந்த வன்முறை உடனடியாக முடிவுக்கு வர வேண்டும். இவ்வாறு டிரம்ப் கூறியுள்ளார். (ஐ)

## ஊழல் வழக்கில் ரூ.336 கோடி லஞ்சம்: சீனாவில் முன்னாள் வேளாண் துறை அமைச்சருக்கு மரண தண்டனை!




சீனாவின் ஊழல் வழக்கில் முன்னாள் வேளாண் அமைச்சர் டாங் ரெஞ்சியனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 2012ம் ஆண்டு அதிபர் ஜி ஜின்பிங் ஆட்சிக்கு வந்த பிறகு, ஆளும் சீன கம்யூனிஸ்ட் கட்சி (ஊீஊ) மேற்கொண்ட மிகப்பெரிய ஊழல் எதிர்ப்பு பிரச்சாரத்தில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான சீன அதிகாரிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர் அல்லது ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதில் டஜன் கணக்கான உயர் ராணுவ அதிகாரிகளும் அடங்குவர். முன்னதாக, கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஊழல் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளது என்று அதிபர் ஜின்பிங் பலமுறை எச்சரித்து வருகிறார். கட்சியின் அதிகாரத்தைத் தக்கவைக்க அதை ஒழிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி வருகிறார்.

இந்த நிலையில்தான் சீனாவின் முன்னாள் அமைச்சர் டாங் ரெஞ்சியனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சீனாவின் முன்னாள் வேளாண்மை மற்றும் கிராமப்புற விவகாரத் துறை அமைச்சர் டாங் ரெஞ்சியன் (வயது 63). இவர் தனது பதவிக்காலத்தில் பல்வேறு திட்டங்களை ஒதுக்கீடு செய்வதில் முறைகேடு செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. அப்போது அரசின் திட்டங்களை பணத்தை வாங்கிக் கொண்டு பயனாளிகளுக்கு ஒதுக்கியதாக கூறப்படுகிறது. இதுதொடர்பான வழக்கு ஜிலின் மாகாணம் சாங்சுன் கோர்ட்டில் நடைபெற்று வந்தது.

விசாரணை நிறைவடைந்த நிலையில் நலத்திட்டங்களை ஒதுக்குவதற்காக பயனாளிகளிடம் இருந்து சுமார் 38 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (ரூ.336 கோடி) வரை லஞ்சம் பெற்றது தெரியவந்துள்ளது. இதையடுத்து, நாட்டையே உலுக்கிய இந்த ஊழல் வழக்கில் டாங் ரெஞ்சியனுக்கு கோர்ட்டு மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது. மேலும் அந்த தொகையை அவரிடம் இருந்து கைப்பற்றி தேசிய கருவூலத்துக்கு மாற்றவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)




## ரஷ்ய படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் 4 பேர பரிதாபமாக உயிரிழப்பு, 10 பேர் படுகாயம்!

உக்ரைன் தலைநகரான கீவ் நகரத்தை குறிவைத்து ரஷ்யா நடத்திய பெரிய அளவிலான வான்வழித்தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டதாகவும், 70-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளார். இந்த தாக்குதலில் கீவ் பகுதிகளில் பல குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் சேதமடைந்தன, அவற்றில் ஒரு இருதயவியல் நிறுவனம் அடங்கும்.

இரவு நேரத் தாக்குதல் 12 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்ததாகக் குறிப்பிட்ட உக்ரைன் உள்துறை அமைச்சர் இஹோர் கிளைமென்கோ, 11 பிராந்தியங்களில் 1,500க்கும் மேற்பட்ட மீட்புப் பணியாளர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மீட்பு பணியில் ஈடுபட்டதாகவும், 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பொருட்கள் சேதமடைந்ததாகவும் கூறினார். உக்ரைனின் விமானப்படை, அதன் வான் பாதுகாப்பு 595 ட்ரோன்களில் 568 ஐ சுட்டு வீழ்த்தியதாகவும், 48 பல்வேறு வகையான ஏவுகணைகளில் 43 ஐ சுட்டு வீழ்த்தியதாகவும், இந்த தாக்குதல் கீவ் நகரை குறிவைத்து நடத்தப்பட்டதாகவும் உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது. (ஐ)

## உலகிலேயே மிக உயரமான பாலம் சீனாவில் திறப்பு



உலகிலேயே மிக உயரமான பாலம் சீனாவின் குய்ஷோ மாகாணத்தில் திறக்கப்பட்டுள்ளது. இரு மலைகளுக்கு இடையே 4658 அடி நீளத்தில் உலகிலேயே மிக உயரமான பாலம் கட்டப்பட்டுள்ளது. புதிய பாலம் திறந்ததால் இரு பகுதிகளுக்கு இடையே பயண நேரம் 2 மணி நேரத்தில் இருந்து 2 நிமிடமானது. (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டத்தரணிகளுக்கு இந்த கௌரவப் பதவி ஜனாதிபதியால் வழங்கப்படுகிறது.

புதிதாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணிகள், உத்தியோகபூர்வமாக நடைபெறும் ஒரு விசேட நீதிமன்ற அமர்வில் பிரதம நீதியரசர் முன்னிலையில் தமது சத்தியப்பிரமாணத்தை மேற்கொள்வார்கள் எனவும், இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வருகின்றது.

குறித்த போராட்டம் யாழ்.செம்மணியில் கடந்த 25ம் திகதி ஆரம்பமாகிய நிலையில் எதிர்வரும் 01ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இன்றைய போராட்டத்தில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த பொது அமைப்புகள் முஸ்லீம் மக்கள் சிலர் எனப் பலரும் இணைந்து கொண்டனர்.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு நீதி வேண்டியும், உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரித்தும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், செம்மணி விவகாரத்திற்கு நீதி கோரியும் குறித்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில், வடக்கின் ஐந்து மாவட்டங்களை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டுள்ள நிலையில், போராட்டத்தின் ஆரம்பத்தில் அணையா விளக்கு பகுதியில் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தி போராட்டத்தை ஆரம்பமானது.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அகழ்வு பணிக்காக சென்ற இரு நபர்கள் தமது பணியை தொடர்ந்த போது நிலத்திற்கு கீழ் இருந்த குண்டு திடீரென வெடித்துள்ளது.

இதன் போது பலத்த காயமடைந்த இருவரும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கோர விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு நோக்கி கோழிகளை ஏற்றி சென்ற லொறியும், மதுரங்குளியில் இருந்து புத்தளம் நோக்கிப் பயணம் செய்த சொகுசு கார் ஒன்றும் மதுரங்குளி செம்பட்டை பிரதேசத்தில் இன்று அதிகாலை 1.30 மணியளவில் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் கருவலகஸ்வெவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த புத்தளம் இஹலபுளியங்குளம் பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான பொலிஸ் சார்ஜன்ட் ருவான் சமிந்த சம்பத் அபேசிங்க உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரின் சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பிலான மேலதிக விசாரனைகளை மதுரங்குளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## எம்.பிக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முறைப்பாடு அளித்தார். முறைப்பாடு அளித்த பின்னர் ஊடகங்களுக்குப் பேசிய கம்மன்பில, பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் விருப்பப்படி தங்கள் கொடுப்பனவுகளைச் செலவிட முடியாது என்றார்.

“159 அரசாங்க எம்.பி.க்கள் ஒவ்வொரு மாதமும் கூட்டாக ரூ. 30 மில்லியனுக்கும் அதிகமாகப் பெற்று, அரசியல் நோக்கங்களுக்காக கட்சி நிதியில் வரவு வைப்பது பொது நிதியை தவறாகப் பயன்படுத்துவதாகும்” என்று அவர் கூறினார்.

அரசியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு, தொலைபேசி பில்கள், எரிபொருள் மற்றும் அலுவலக பராமரிப்பு உள்ளிட்ட கட்சி தொடர்பான செலவுகளைச் செலுத்த இந்த நிதி பயன்படுத்தப்படுவதாக கம்மன்பில மேலும் கூறினார்.

“இது 159 பாராளுமன்ற உறுப்பினர்களும், ஜனாதிபதியும் சேர்ந்து மாதத்திற்கு ரூ. 30 மில்லியனுக்கும் அதிகமான தொகையை தவறாகப் பயன்படுத்துவதற்குச் சமம்” என்று அவர் மேலும் கூறினார், இந்த விவகாரம் குறித்து ஆணைக்குழு விசாரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

# இராமநாதன் அர்ச்சுனா பிணையில் செல்ல அனுமதி!

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா கோட்டை பொலிஸாரால் இன்று (29) காலை கைது செய்யப்பட்டிருந்தார். வாக்குமூலம் அளிப்பதற்காக கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு சென்றிருந்த வேளையில் அவர் கைது செய்யப்பட்டார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற போராட்டத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா வந்திருந்த வேளையில் வாகனத்தை நிறுத்துவது தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டிருந்தது.

இதன்போது கோட்டை பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவரை திட்டியிருந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைக்காக கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு இன்று காலை சென்றிருந்த நிலையில், எம்.பி அர்ச்சுனா கைது செய்யப்பட்டார்.

இந்தநிலையில் கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

# அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த வர்த்தக நிலையங்கள் சோதனை

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த வர்த்தக நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி கடந்த இரண்டு வாரங்களில் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த 105 வர்த்தக நிலையங்களில் சோதனை நடத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த வர்த்தக நிலையங்கள் மீது வழக்குத் தொடரவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அரிசிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையை மீறி, அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அத்துடன் தனியான வர்த்தகர் அதிக விலைக்கு அரிசி விற்று, அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், அவருக்கு 100,000 ரூபாய் முதல் 500,000 ரூபாய் வரை அபராதம் அல்லது 5 மாதங்கள் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம் என்று அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஒரு தனியார் நிறுவனம் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் நீதிமன்றம் 500,000 ரூபாய் முதல் 5,000,000 ரூபாய் வரை அபராதம் விதிக்கலாம், அபராதம் அல்லது சிறைத்தண்டனை அல்லது மேற்கூறிய இரண்டும் விதிக்கப்படலாம்.

மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்த பொருட்களை அதிகாரசபையின் சட்டத்தின் கீழ் அரசுடமையாக்கவும் நீதிமன்றத்தால் முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகாரசபை இந்த ஆண்டு இதுவரை 3,000 க்கும் மேற்பட்ட அரிசி தொடர்பான சோதனைகளை நடத்தியுள்ளது.

அந்த சோதனைகளில் 1,000 க்கும் மேற்பட்டவை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தலைவர் ஹேமந்த சமரக்கோன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# தாஜுதீனின் மரணம்: புதிய விசாரணைக்கு குடும்பத்தினர் வலியுறுத்தல்



மறைந்த இலங்கை ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் குடும்பத்தினர், அனுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்திடம், அவரது மரணம் குறித்து மீண்டும் விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். 13 ஆண்டுகளுக்கும் மேலாக நீதி மறுக்கப்பட்டுள்ளதாகக் கூறி வருகின்றனர்.

ஊடகங்களுக்குப் பேசிய தாஜுதீனின் மாமா, 2012 மே மாதம் சம்பவம் நடந்தபோது, தாஜுதீன் ஒரு கார் விபத்தில் இறந்துவிட்டதாக குடும்பத்தினருக்குச் சொல்லப்பட்டதை நினைவு கூர்ந்தார்.

“நான் சம்பவ இடத்திற்குச் சென்றபோது, அவர் பயணிகள் இருக்கையில் இருந்தார், மேலும் வாகனம் மிகக் குறைந்த சேதத்தை மட்டுமே சந்தித்திருந்தது. இதுபோன்ற விபத்தில் யாராவது இறந்திருக்கலாம் என்பது ஆச்சரியமாக இருந்தது,” என்று அவர் கூறினார்.

அந்த நேரத்தில் ஆரம்ப அறிக்கை, தாஜுதீன் வேகமாகவும், குடிபோதையிலும் வாகனம் ஓட்டியதாகவும், விபத்தால் ஏற்பட்ட தீயிலிருந்து ஏற்பட்ட புகையை சுவாசித்ததால் இறந்ததாகவும் முடிவு செய்ததாக அவர் மேலும் கூறினார்.

# அடுத்த வரவு செலவுத் திட்டத்தில்.....

இப்போது அது நிரூபிக்கப்பட்டுள்ளது. இன்று, 40 கட்சிகள் ஒரே அறையில் கூடும் அளவுக்கு அது நிரூபிக்கப்பட்டுள்ளது. நமது நாட்டின் பிரஜைகள், சட்டத்திற்கு பயப்பட வேண்டும். அந்த கலாச்சாரத்தை நாம் உருவாக்க வேண்டும்.

மேலும், தேசிய பிரச்சினையை நாம் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு இடையே மேலும் மோதல்கள் இல்லாத வகையில் நாட்டை ஆளுவதே எங்கள் அணுகுமுறையாகும். வடக்கின் மக்கள் போரினால் மோசமாக பாதிக்கப்பட்டனர்.

இனிமேல் போர் இல்லாத வகையில் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் தேசிய ஒற்றுமையை உருவாக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

வடக்கு மக்களுக்கு தேவையான அபிவிருத்தி மற்றும் சட்டப் பாதுகாப்பு வழங்கி சிங்கள ,தமிழ்,முஸ்லிம் அனைத்து மக்களுக்கும் சம உரிமைகள் உள்ள ஒரு நாட்டையும் நாங்கள் உருவாக்கி வருகிறோம்.

நமது குழந்தைகளை போதைப்பொருள் அச்சுறுத்தலில் இருந்து காப்பாற்றவும் நாங்கள் பாடுபடுகிறோம். போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் பின்னிப் பிணைந்துள்ளன.

இன்று, இவற்றைக் கட்டுப்படுத்த நாங்கள் பாடுபடுகிறோம். போதைப்பொருள் மற்றும் குற்றங்களின் இந்த மறைவான அரசை மூட முடிவு செய்துள்ளோம்.

மேலும், இந்த பொருளாதார வளர்ச்சியின் நன்மைகள் மக்களை சென்றடைய வேண்டும். நாம் மேல்மட்டத்தில் எவ்வளவு பொருளாதார வளர்ச்சியைக் காட்டினாலும், மக்களின் வாழ்க்கை மாறவில்லை என்றால், அது பலனளிக்காது.

மக்களின் வாழ்க்கையை எப்போதும் 'அஸ்வெசும'வுக்கு மட்டுப்படுத்தப்பட முடியாது. அவர்களுக்கு பொருளாதார வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, விவசாயம் மற்றும் கால்நடைத் துறைகளை நவீன தொழில்நுட்பத்துடன் முன்னோக்கி எடுத்துச் செல்ல வேண்டும். கிராமங்களுக்கு பொருளாதாரத்தையும் விரிவுபடுத்த வேண்டும். அதற்குத் தேவையான திட்டங்களை நாங்கள் தயாரித்துள்ளோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் நமது நாட்டு மக்கள் ஒரு புதிய மாற்றத்தை, ஒரு புதிய பயணத்தை விரும்பியிருந்தால், அந்த புதிய மாற்றத்திற்கும் புதிய பயணத்திற்கும் நாங்கள் அர்ப்பணிப்புடன் உழைக்கிறோம்.

அந்தப் பயணத்தில் உங்கள் பங்களிப்பையும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். உங்களிடமிருந்து ஒரு கிண்ணம் நீர் கூட எங்களுக்கு வேண்டாம்.

நாட்டிற்கு முதலீடுகளைக் கொண்டு வாருங்கள். மேலும், வெளிநாட்டில் பணிபுரியும் போது நீங்கள் பெற்ற அனுபவங்களை எங்கள் நாட்டிற்கு கொண்டு வாருங்கள். அதற்குத் தேவையான வசதிகளை நாங்கள் தயார் செய்து தருகிறோம்.

அதன்படி, தேசத்தைக் கட்டியெழுப்பும் பயணத்தின் ஒரு பகுதியாக மாற உங்களுக்கு வாய்ப்பு உள்ளது” என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஜப்பானுக்கான இலங்கை தூதுவர் பேராசிரியர் பிவிதுரு ஜனக் குமாரசிங்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.09.2025வெளியிடப்பெற்றது.